**தமிழ் இணையக் கல்விக்கழகம்**
**சென்னை – 600 025.**

**இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)**
**முதலாம் ஆண்டு – முதற்பருவம்**

| **நேரடி எழுத்துத் தேர்வு (OFFLINE WRITTEN EXAMINATION)** |
|---|

**ஜனவரி – பிப்ரவரி 2022**

**C012 இடைக்கால இலக்கியம்**

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

(குறிப்பு : பிரிவு – 1இல் இருந்து அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடையளிக்க வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

**பிரிவு – 1**

**ஒரு சொல் / தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. நான்மணிக்கடிகை நூலின் ஆசிரியர் யார்?
2. திரிகடுகம் என்ற நூல் தலைப்பு உணர்த்தும் மூன்று மருந்துப் பொருள்கள் யாவை?
3. இன்னா நாற்பதில் எத்தனை இன்னாத கருத்துகள் இடம்பெற்றுள்ளன?
4. உலக்கை மேல் காக்கையை யாருக்கு ஒப்பிடுகிறார் முன்றுறையரையனார்?
5. கைப்பொருளை விட மெய்ப்பொருள் எது?
6. வன்சொல்லால் வெல்ல முடியாததை எச்சொல்லால் வெல்ல முடியும்?
7. கல்வியைத் தொடங்கும் போது எப்படி இருக்கும்?
8. யாரை அறிஞர்கள் என்கிறோம்?
9. திருக்குற்றாலக் குறவஞ்சியின் ஆசிரியர் யார்?
10. கலம்பக உறுப்புகள் எத்தனை?
11. கோவை இலக்கியத்தின் மற்றொரு பெயர் யாது?
12. பண்டைய பரணி நூல்களுள் நான்கினைக் குறிப்பிடுக.
13. பிள்ளைத்தமிழ்ப் பருவங்களின் எண்ணிக்கை எவ்வளவு?
14. முக்கூடற்பள்ளுவின் காலம் எது?
15. தண்டலையார் சதகத்தின் முழுப்பெயரைக் குறிப்பிடுக.

## பிரிவு – 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடை தருக. (5x3=15)**

1. சிறுபஞ்சமூலம் கூறும் ஐந்து உறுதிப்பொருள்கள் யாவை?
2. ஈகையும் இரத்தலும் குறித்து இன்னா நாற்பது கூறுவன யாவை?
3. மனித வாழ்க்கைக்கு அடிப்படையானவர் என்று உலகநீதி யாரைக் குறிப்பிடுகிறது.
4. நட்பில் பிரிவு கூடாது என்பதற்கு நன்னெறி கூறியுள்ள உவமையை விளக்குக.
5. திருக்குற்றாலக் குறவஞ்சியில் கடவுள் வணக்கம் யார் மீது பாடப்படுகிறது?
6. தலைவிக்காகத் தலைவன் செய்யத் தயாராய் உள்ள வேலைகள் யாவை?
7. பள்ளியர் ஏசலில் சமயம் எவ்வாறு இடம் பெற்றுள்ளது?
8. அந்தாதி என்றால் என்ன? அதன் பொருளை விளக்குக.

## பிரிவு – 3

**மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக. (3x15=45)**

1. (அ) கற்றுக்கொள்ள வேண்டிய நெறிகளாக ஆசாரக்கோவை கூறுவனவற்றைத் தொகுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுக்குப் பின்னர் தோன்றிய அறநூல்கள் குறித்து எழுதுக.

2. (அ) கல்வி குறித்து நன்னெறி கூறுவனவற்றைத் தொகுத்து எழுதுக.

(அல்லது)

(ஆ) தலைவியின் பெருமைகளாக அழகர் கிள்ளைவிடு தூது கூறுவனவற்றைத் தொகுத்துரைக்க.

3. (அ) முக்கூடல் நகர்ச் சிறப்பு பற்றி எழுதுக.

(அல்லது)

(ஆ) சதகத்தின் பாடுபொருள் குறித்து விளக்குக.

***